உ.

கடவுள் துணை.

# குள்ளத்தாரா சிந்து.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதரூஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்பமுதலிவீதி, மதரூஸ். என். சி.

140

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, ஜூலை, போல்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோல்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும்; அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்ட்டியார்டு அளவுள்ளவிநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபிலில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோல்டன் பிரஸ், தூனை போல்டு மதராஸ்.

உ

கடவுள் துணை.

# குள்ளத்தாராசிந்து.

### விநாயகர் வணக்கம்.

### விருத்தம்.

சிந்துசூழுலகிலுள்ளோர் திரௌபலங்கொள்ளவேண்டி
விந்தைசேர்மனதுக்கோதும் வியன்மதிமாலைதன்னை
கந்தமார்சிந்தாய்கூறக் கரிமுகனுபயபொற்பூந்
தொந்தலர்க்கழலைநாளுங் கூப்பியேபணிகுவாமால்.

### ஙா ன் மு க ம்.

### சிந்து - கண்ணிகள்.

சித்திவிநாயகனை ஏ குள்ளத்தாராநீ
சிந்தைதனிலேவகிப்பாய் ஏ குள்ளத்தாரா.

ஏகுலுக்கி தில்லாலேநீ முன்னாலே நான்பின்னாலே
சிந்தைதனிலேவகிப்பாய் ஏ குள்ளத்தாரா 1

பாடலீசன்பொற்பதத்தை ஏ குள்ளத்தாராநீ
பக்தியுடன்போற்றிசெய்வாய் ஏ குள்ளத்தாரா 2

பேர்பெரியநாயகியை ஏ குள்ளத்தாராநீ
வெற்றியுடன்போற்றிசெய்வாய் ஏ குள்ளத்தாரா 3

வேலவனைப்போற்றிடுவாய் குள்ளத்தாரா நின்
வினைகளகன்றிடுவாய் குள்ளத்தாரா 4

வள்ளிதெய்வானைபதம் குள்ளத்தாராநீ
வண்மையுடன்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா 5

ஆதிமூலப்பொருளை குள்ளத்தாராநீ
அன்புடனேபோற்றிசெய்வாய் குள்ளத்தாரா 6

செந்திருவின்பொற்பதத்தைக் குள்ளத்தாராநின்
சிந்தையிலிருந்திடுவாய் குள்ளத்தாரா 7

தாயார்சரஸ்வதியை குள்ளத்தாராநீ
சந்ததமும்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா 8

ஆருயிர்க்குருதுணையாங் குள்ளத்தாரா என
தன்பின்வழியேநடக்கிற குள்ளத்தாரா 9

சந்திரகாந்தமேடையுண்டு குள்ளத்தாரா வதைச்
சாரவும்பொன்னேணியுண்டு குள்ளத்தாரா 10

பன்னிருகால்வாசியுண்டு குள்ளத்தாரா வதைப்
பற்றப்பரிசுத்தனுண்டு குள்ளத்தாரா 11

சோமவட்டமாம்பதியிற் குள்ளத்தாராநீ
சுகித்தமுர்தமுண்டிருப்பாய் குள்ளத்தாரா 12

எமனுமடறுவானே குள்ளத்தாராநீ
என்வழிநடப்பையாகில் குள்ளத்தாரா 13

இந்திரப்பட்டமும்பெறுவாய் குள்ளத்தாரா சொல்
இருவினையகன்றிடுவாய் குள்ளத்தாரா 14

கட்டிலுண்டுமெத்தையுண்டு குள்ளத்தாரா நாம்
கலந்துசுகிக்கலாமே குள்ளத்தாரா 15

தலையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா ரத்ன
சடைபில்லைதானுமுண்டு குள்ளத்தாரா 16

ஜடைநாகங்களுமுண்டு குள்ளத்தாரா வதைச்
சார்ந்துகுச்சுகுப்பியுண்டு குள்ளத்தாரா 17

காதிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா நல்ல
கம்மல்சிமிக்கியுண்டு குள்ளத்தாரா 18

கொப்புமுருகுமுண்டு குள்ளத்தாரா நற்
கொந்தளப்பொன்னோலையுண்டு குள்ளத்தாரா 19

சத்திரிப்பாவலுடனே குள்ளத்தாரா நல்ல
கனத்தகம்புலுமுண்டு குள்ளத்தாரா 20

நத்துமுக்குத்தியுண்டு குள்ளத்தாரா நீ
நாணயமாய்ப்பூட்டிக்கொள்ள குள்ளத்தாரா 21

கழுத்திலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா உயர்
கண்டசரமாலையுண்டு குள்ளத்தாரா 22

கைக்குத்தங்கக்காப்புமுண்டு குள்ளத்தாரா
கனத்தகொலுசுமுண்டு குள்ளத்தாரா 23

இடையிலணிந்துகொள்ள குள்ளத்தாரா
இசைந்தலொட்டியாணமுண்டு குள்ளத்தாரா 24

பாதசரந்தண்லடையுண்டு குள்ளத்தாராநீ
பண்புடனணிந்துகொள்ளக் குள்ளத்தாரா 25

விரலிற்றரித்திடவும் குள்ளத்தாரா வெகு
விந்தைமோதிரங்களுண்டு குள்ளத்தாரா 26

இமையாயிரம்பொன்பெற்ற குள்ளத்தாரா உனக்
கிந்திரவர்னச்சேலையுண்டு குள்ளத்தாரா 27

சரிகைரவிக்கையுண்டு குள்ளத்தாரா திகழ்
தங்கவங்கிபில்லையுண்டு குள்ளத்தாரா 28

பத்துலட்சம்விலையுள்ள குள்ளத்தாரா உயர்
பங்களாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா 29

தங்கத்தாலேகிண்ணியுண்டு குள்ளத்தாராநீ
சாதமருந்திடவே குள்ளத்தாரா 30

வெள்ளிப்பாத்திரங்களுண்டு குள்ளத்தாராநீ
வேணதையனுபவிப்பாய் குள்ளத்தாரா 31

கைப்பிடிக்கக்கால்பிடிக்கக் குள்ளத்தாரா சொலுங்
கனத்ததோழிகளுண்டு குள்ளத்தாரா 32

ஏரிச்சவாரிசெய்ய குள்ளத்தாரா உனக்
கிசைந்தபல்லாக்குமுண்டு குள்ளத்தாரா 33

தந்தகாற்காலியுண்டு குள்ளத்தாராநீ
சார்ந்துகொண்டிருப்பதற்குக் குள்ளத்தாரா 34

சோபாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா என்
சுந்தரியேநீயிருக்கக் குள்ளத்தாரா 35
பொன்னூஞ்சற்பலகையுண்டு குள்ளத்தாரா என்
பொற்கொடியேயாடுதற்கு குள்ளத்தாரா 36
நன்னயமாய்ப்பேசுதற்கு குள்ளத்தாரா நல்ல
நாத்திமாரனேகருண்டு குள்ளத்தாரா 37
மாமியுண்டுமாமனுண்டு குள்ளத்தாரா
மைத்துனரனேகருண்டு குள்ளத்தார 38
சந்துமுண்டுபொந்துமுண்டு குள்ளத்தாரா
ஜாடைசெய்துகூப்பிடவுங் குள்ளத்தாரா 39
தென்னமரச்சோலையுண்டு குள்ளத்தாராநீ
சிந்தைகளித்தாடவாடி குள்ளத்தாரா 40
பாக்குமரச்சாலையுண்டு குள்ளத்தாராநீ
பந்துவிளையாடவாடி குள்ளதத்தாரா 41
கற்பகத்தருவுமுண்டு குள்ளத்தாராநீ
கருதியதெல்லாந்தாக் குள்ளத்தாரா 42
கெடிலநதியுமுண்டு குள்ளத்தாரா வதின்
கிளர்கடுக்காவுமுண்டு குள்ளத்தாரா 43
உன்னைநம்பிநானிருந்தால் குள்ளத்தாரா இந்த
வுலகம்பொருக்கலையே குள்ளத்தாரா 44
அந்தமுள்ளமாதரசே குள்ளத்தாரா
யன்புடனருகில்வாராய் குள்ளத்தாரா 45

கிள்ளைநேர்மொழியினளே குள்ளத்தாராநீ
கிருபைசெய்துவாராயோடி குள்ளத்தாரா 46

மயில்போலுஞ்சாயலாளே குளளத்தாரா என்
மனதுமுருகாதோடி குள்ளத்தாரா 47

அன்னநடைமாதேயடி குள்ளத்தாரா உன்
னகமுமிரங்காதோடி குள்ளத்தாரா 48

அடைக்காயும்வெள்ளிலையுங் குள்ளத்தாரா வெனக்
கருந்தவரியாயோடி குள்ளத்தாரா 49

வாசனைத்திரவியங்கள் குள்ளத்தாரா நீ
வகைவகையாய்ப்பூசிக்கொள்வாய் குள்ளத்தாரா 50

சண்பகமலர்நிதமும் குள்ளத்தாராநீ
சம்பிரமமாய்முடித்துக்கொள்வாய் குள்ளத்தாரா 51

பாடலீசன்பொற்பதத்தைக் குள்ளத்தாரா நீ
பத்தியுடன்சேவைசெய்வாய் குள்ளத்தாரா 52

பாலும்நீரும்போலவடி குள்ளத்தாரா நாம்
பண்புடனேவாழ்ந்திருப்போம் குள்ளத்தாரா 53

மங்களமாய்வாழ்ந்திருப்பாய் குள்ளத்தாரா இந்த
வையகமுள்ளளவுமடி குள்ளத்தாரா. 54

குள்ளத்தாராசிந்து.

முற்றிற்று.